# விருப்ப ஓய்வு - அனுமதியோம்

இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனம் மட்டுமல்லாமல் ஊழியர் எண்ணிக்கையிலும் BSNL முதல் இடத்தை வகிக்கிறது. 4 வருடங்களுக்கு முன்னர் 2,98,000 ஊழியர்கள் இருந்த நிறுவனத்தில் தற்போது 2,43,000 ஊழியர் உள்ளனர். வருடத்திற்கு சுமார் 10,000 ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்கின்ற போதிலும் ஊழியர் எண்ணிக்கை மேலும் குறைக்க வேண்டும் என்று சதித்திட்டம் தீட்டி வருகிறது நிர்வாகம்.

இதனை அமுல்படுத்துவதற்கு வசதியாக NFTE -FNTO சங்கங்கள் அங்கீகாரத்தில் இருந்த போது ஆயிரக்கணக்கான ஊழியர்களை உதவாக்கரை ஊழியர்கள் (Wasting Cadre) என உடன்பாடு கண்டு உத்தரவு வெளியிட்டது. 30,000 டெலிகாம் மெக்கானிக் ஊழியர்கள் உபரி என்று அறிவிப்பு செய்தது. சுமார் 1,00,000 ஊழியர்கள் மெட்ரிகுலேஷன் படிப்பை முடிக்காதவர்கள் என்று BSNL நிர்வாகம் புதிய கண்டுபிடிப்பை வெளியிட்டுள்ளது. சராசரி வயது 47ஆக உயர்ந்து விட்டது என்றும் தெரிவித்துள்ளது.

20,000 ஊழியர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு அந்த இடத்தில் கல்வித் தகுதியுடைய புதிய இளைஞர்களை ஒப்பந்த முறையில் பணிக்கு அமர்த்துவது உடனடி திட்டம். இதை BSNL - CMD, DoT செக்ரட்டரி மட்டுமில்லாமல் தொலைத் தொடர்பு மந்திரியும் இரண்டு வருடங்களுக்கு முன்னரே பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

VRS திட்டம் வேண்டும். CRS திட்டத்தை பரிசீலிக்கலாம் என்பது NFTEயின் நிலைபாடு. VRS திட்டத்தைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தலாம் என்பது FNTOவின் தற்போதைய நிலைபாடு.

2005ல் நடந்த முதல் NJCM கூட்டத்தில் VRS / CRS திட்டத்தை ரத்து செய்வதென முடிவு எடுக்கப்பட்டாலும் VRS / CRS திட்டம் தொடர்ந்து நம்மை பயமுறுத்தி வருகிறது. NFTE - FNTO கூட்டணியினர் BSNLன் சதித் திட்டத்திற்கு ஆதரவாக உள்ளனர். ஆனால் நமது சங்கம் மூலமாக கடந்த 4 ஆண்டுகளாக சதித்திட்டத்தை அரங்கேற்ற விடாமல் தடுத்துள்ளோம். இனியும் அப்பணியை தொடர்ந்து செய்திட ஆதரவு கேட்கின்றோம்.

**ஊழியர் பணிப்பாதுகாப்பை உத்தரவாதம் செய்ய "செல்" சின்னத்துக்கு வாக்கு கோருகிறோம்.**

## ஜுலை 11 வேலை நிறுத்தம்

2007ம் ஆண்டில் BSNL நிறுவனத்தால் செல்லுலார் சேவையை விரிவுபடுத்த முடியவில்லை. கடும் தேக்க நிலை இருந்தது. அதற்கு அடிப்படையான காரணம், செல் சேவைக்குத் தேவையான கருவிகளை வாங்க விடப்பட்ட டெண்டரில் பிரச்சினை என்று தொலைத் தொடர்பு அமைச்சர் நிறுத்தி வைத்ததால் BSNL செல் சேவையை விரிவுபடுத்த முடியவில்லை. அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக 2007- ஜுலை 11 அன்று நாடு முழுவதும் மிகவும் பிரம்மாண்டமான வேலை நிறுத்தத்தை நாம் நடத்தினோம். அதன் பிறகே 2.3 மில்லியன் செல் இணைப்புகள் வழங்குவதற்கான கருவிகளை வாங்க PO வெளியிடப்பட்டது. தொலைத் தொடர்பு ஊழியர் இயக்க வரலாற்றில் அனைத்து அதிகாரிகளையும் - ஊழியர்களையும் ஒருங்கிணைத்து BSNLஐகாக்க நடத்தப்பட்ட வெற்றிகரமான வேலை நிறுத்தம் இது. வேலை நிறுத்தம் குறித்து திரு. ராஜகோபாலன், முன்னாள் CMD / MTNL, பிஸினஸ் லைன் பத்திரிக்கையில் "BSNL நிறுவனத்தின் வளர்ச்சி குறித்து, கொள்கை ரீதியான நிலையை எடுத்து வேலை நிறுத்தம் செய்த BSNL ஊழியர் சங்கத்தினை மனதார பாராட்டுகிறேன்" என்று பாராட்டியுள்ளார். பத்திரிக்கைகள் கூட இதை பாராட்டின. நாம் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருந்ததால்தான் இது சாத்தியமாயிற்று. NFTE அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருந்திருந்தால் வேலை நிறுத்தம் நடந்திருக்காது என்பது மட்டுமல்ல, அரசின் நடவடிக்கைக்கு ஆமாம் போட்டிருக்கும் என்பதே உண்மை.

# போனஸ்

தொலைத் தொடர்புத் துறையிலிருந்து, BSNLஆக மாறிய பின்னர், நமக்கு உற்பத்தித் திறன் உடன் இணைந்த போனஸ் என்பது மாறி உற்பத்தித் திறன் உடன் இணைந்த ஊக்கத் தொகை (Incentive) என மாறிவிட்டது. NFTE BSNL அங்கீகாரம் பெற்றிருந்த காலத்தில் எந்த ஒரு வரைமுறையும் இல்லாமல், தற்காலிகமாக ஒரு தொகை (Adhoc Bonus) என்பது தரப்பட்டது. தற்காலிக போனஸ் என்பதே நிரந்தரமாக்கப்பட்டது. அது மட்டுமல்ல 2002-2003க்கான போனஸ் என்பது 75 சதமானமாக ரூ.4,500/- மட்டுமே தரப்பட்டது.

நமது சங்கம் அங்கீகாரம் பெற்ற உடனேயே, ஒரு புதிய ஃபார்முலாவை உரு வாக்கினோம். 2002-2003ஆம் ஆண்டு நமக்கு கொடுக்காமல் ஏமாற்றப்பட்ட 25 சதமான போனஸினை நமது மத்தியச் சங்கம் வாதாடி பெற்றுத் தந்தது. அடுத்த ஆண்டு தேசிய கவுன்சிலில் விவாதிக்கப் பட்டு குறைந்தபட்ச போனஸ் ரூ.10,000/- ஆக உயர்த்தப்பட்டது. இதுதான் இரண்டு சங்கங்களுக்குமிடையே உள்ள வித்தியாசம் என்று ஊழியர்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும்.

PLIல் தொடர்ந்து மூன்று ஆண்டு களாக இருந்து வந்த முன்னேற்றத்தில் இந்த வருடம் ஒரு தடங்கல் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நாலரை கோடி புதிய இணைப்பிற்கான டெண்டரில் அமைச்சர் ஏற்படுத்திய குளறுபடி, அரசாங்கத்தின் தனியார் ஆதரவுக் கொள்கை மற்றும் நிர்வாக கோளாறு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், 2007-2008ம் ஆண்டுக் கான நமது வருமானம் குறைந்துள்ளது. BSNLன் செயல்பாட்டினை 'Fair' என்று DPE தர நிர்ணயம் செய்துள்ளது. இதன் காரணமாகவே நிர்வாகம் 'Non-Executive ஊழியர்களுக்கான PLI ரூ.7,000/- முதல் ரூ.10,000/- வரை மட்டுமே தர முடியும் என்று கூறியது. அனைத்துப் பகுதி ஊழியர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் இந்த அறிவிப்பினை ஏற்க முடியாது என்று 26.9.2008 அன்று நாடு தழுவிய ஆர்ப்பாட்டத்தினை நமது United Forum சார்பாக நடத்தினோம். நாம் அனைத்துப் பகுதி ஊழியர்களையும் ஒன்றுதிரட்டி குறைந்தபட்சமாக பத்தாயிரம் ரூபாய் என்று கோரிக்கை வைத்து இந்தப் போராட்டம் நடத்தும் போது, NFTE BSNL சங்கம் 14,500 என்று அதீதமான கோரிக்கை வைத்து தனியாக நின்றது. அது தேர்தல் நேரத்து உத்தி என்று நமக்குத் தெரியும். ஆனால் இவர்களது தனியாக நிற்கும் முயற்சியை நிர்வாகம் சரியாக பயன்படுத் திக் கொண்டது. நமது எதிர்ப்பையும் மீறி, தேசிய கவுன்சிலின் முடிவையும் மீறி, நிர்வாகம் தன்னிச்சையாக ரூ.7,000 முதல் ரூ. 10,000/- என்ற உத்தரவை வெளி யிட்டுள்ளது.

தோழர் நம்பூதிரி 50,000 கோடி வருமானத்திற்கு உத்தரவாதம் கொடுத்தார். ஆனால் வருமானம் குறைந்ததால் போனஸ் குறைந்துள்ளது என NFTE, நிர் வாகம் போல் பிரச்சாரம் செய்கிறது. உண் மையில் தேசியக் கவுன்சில் கூட்டத்தில் 50,000 கோடி வருமானம் வருவதற்கு நிர்வாகத்தோடு ஒத்துழைக்கத் தயார் என்றுதான் நம்பூதிரி கூறினார். NFTE முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க நினைக்கிறது.

லாபம் குறைவதற்கு நாம் எந்த விதத்திலும் காரணம் இல்லை என்பதாலும், கடந்த ஆண்டை விட 90 சதவிகித ஊழியர்களுக்கு மூவாயிரம் ரூபாய் இழப்பு என்பது நியாயமற்ற செயல் என்பதாலும் நமது மத்திய சங்கம் தனது கடும் எதிர்ப்பை நிர்வாகத்திற்கு தெரிவித்துள்ளது. நமது தமிழ் மாநிலச் சங்கமும் ஊழியர் களின் எதிர்ப்பை அரசுக்குத் தெரிவிக்கும் வகையில் 30.9.08 அன்று கருப்பு அட்டை அணிந்து ஆர்ப்பாட்டத்தினை மாநில அளவில் நடத்தியது.

# கூட்டணியிலிருந்து FNTO விலகல்

ஆனால், நமது கூட்டணியிலிருந்து FNTO விலகுவதாக திடீரென 5.10.2008 அன்று FNTO இணையதளத்தில் செய்தி வெளியானது. கூட்டணியிலிருந்து விலகுவதற்காக FNTO சொல்லும் காரணங்களை ஆராய்ந்தால் நமக்கு ஆச்சரியமே ஏற்படும்.

**FNTO சொல்லும் காரணங்கள் :**

(1) அங்கீகாரம் இல்லாத சங்கங்களுக்கும் சந்தா பிடிக்கலாம் என்ற நிர்வாகத்தின் உத்தரவினை எதிர்த்து BSNLEU உ.பி. (கிழக்கு) மாநிலச் செயலர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.

(2) ஊழியர்களின் பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தீரவில்லை.

(3) சில மாவட்டங்களில் / மாநிலங்களில் BSNLEUவிற்கும் FNTOவிற்கும் உள்ள முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை.

**நமது நிலை :**

(1) United Forum வழிகாட்டும் குழுவில் FNTOல் உள்ள முரண்பாடுகள் பேசப்பட்டு பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் மட்டும்தான் பிரச்சினை தொடர்கிறது.

(2) தற்போது நமது மத்திய சங்கத்தின் தலையீட்டின் பேரில் உ.பி. (கிழக்கு) மாநிலச் செயலர், நீதிமன்ற வழக்கினை வாபஸ் பெற்று விட்டார்.

(3) கடந்த 4 வருடங்களில் United Forum சார்பாக 100க்கும் மேற்பட்ட ஊழியர் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

(4) பதவி உயர்வு கொள்கையில் உடன்பாடு தற்போது போடப்பட்டுள்ளது.

எனவே FNTO சொல்லும் காரணங்களில் உண்மை இல்லை என்பது தெள்ளத் தெளிவாகிறது. தனது தலைமையில் மூன்றாவது அணி என்று பேசிக் கொண்டிருந்த FNTO நம்மை விட்டு விலகிய உடன் NFTE சங்கத்தோடு உடன்பாடு போட்டு அந்த கூட்டணியில் இணைந்துள்ளது.

2003ம் ஆண்டில் NFTE தேர்தலில் வென்ற பிறகு FNTO அந்த சங்கத்துடன் கூட்டணி வைத்துக் கொண்டது. தேசிய, மாநில, மாவட்டக் கவுன்சிலில் பதவிகளையும் பெற்றுக் கொண்டது FNTO. ஓராண்டுக் காலம் NFTE கூட்டணியில் தொடர்ந்தது.

பின்னர் NFTE சங்கத்தின் ஊழியர் விரோதப் போக்கினை எதிர்த்து கூட்டணியை விட்டு விலகுவதாக அறிவித்தது. NFTE சங்கம் VRS / CRS திட்டத்திற்கு ஒப்புதல் கொடுத்தது, பென்சனை CDA சம்பளத்தில் பெற்றுக் கொள்ள ஆலோசனை வழங்கியது உள்ளிட்ட ஊழியர் விரோதப் போக்கினை எதிர்த்தே வெளிவந்ததாக FNTO கூறியது. FNTOவின் பொதுச் செயலர் தோழர் வள்ளிநாயகம் அவர்கள் ஐதராபாத்தில் நடைபெற்ற நமது BSNLEU மத்திய செயற்குழுக் கூட்டத்தில்,

"I joined NFTE alliance to save my skin but I came out of it to save my soul"

என்று கூறியது நம் காதுகளில் இன்னும் ஒலிக்கிறது.

BSNLEU ஊழியர் விரோதப் போக்கினைக் கடைப்பிடிக்கிறது என்று FNTO சொல்ல முடியுமா? முடியாது. FNTO

சங்கத்திற்கு என்று ஒரு அரசியல் பார்வை உண்டு. அதுதான் கூட்டணி முறிவுக்குக் காரணம் போலும். அதுசரி! FNTO மீண்டும் ஒரு முறை தன்னுடைய ஆன் மாவை (Soul) தொலைத்து விட்டு NFTEயுடன் கூட்டணி சேர்ந்துள்ளது. ஊழியர்கள் இதை ஆதரிப்பார்களா?

கூட்டணி தர்மத்தை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் தான் வேலூரில் 100க்கும் மேற்பட்ட FNTO உறுப்பினர்கள் சங்கத்தை விட்டு விலகி நம்மிடம் சேர முன்வந்தபோது நாம் ஏற்க வில்லை. தமிழ் மாநிலத்தில் பல FNTO உறுப்பினர்கள் நம் சங்கத்திற்கு வரத் தயார் நிலையில் இருந்த போதும் நாம் ஏற்கவில்லை. இனிமேல் தடையேதும் இல்லை.

சமீபத்தில் ஆந்திர மாநிலத்தில் "நிசாமாபாத்" மாவட்ட FNTO சங்கம் ஒரு நல்ல முடிவினை எடுத்துள்ளது. FNTO மாவட்டச் சங்கத்தை கலைத்து விட்டு அப்படியே BSNLEUவில் இணைந்துள் ளனர். நாடு முழுவதும் FNTO உறுப்பினர் கள் NFTE கூட்டணியை விரும்பவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். இந்தத் தேர்தலில் நியாய உள்ளம் படைத்த FNTO உறுப்பினர்கள் "செல்" சின்னத்திற்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண் டும் என அன்பு வேண்டுகோள் விடுக் கிறோம்.

# தடுமாறும் NFTE BSNL

முதல் அங்கீகாரத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் NFTE BSNL சங்கம் ஒரு சங்கத்திற்கு மட்டுமே அங்கீகாரம் என்று கூறி வந்தது. அது 35 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற்றிருந்த போதும் மற்ற சங்கங்கள் முறையாக செயல்படக்கூட அனுமதிக்க வில்லை. மற்ற சங்கத்தை சார்ந்தவர்கள் நிர்வாகத்தை எந்த மட்டத்திலும் சந்திக்கக் கூடாது. ஊழியர்கள் பிரச்சினையை விவாதிக்கக் கூடாது. அலுவலகங்களில் அறிவிப்பு பலகை வைக்கக் கூடாது. அலுவலக வாயில்களில் கூட கூட்டம் போடக்கூடாது என்று ஜன நாயக விரோத செயல்களில் ஈடுபட்டதோடு நிர்வாகத்தின் துணையோடு மாற்று சங்கத்தை சார்ந்தவர்களுக்கு இடமாற்றல் உள்ளிட்ட பழிவாங்குதல்களை செய்வது என அராஜகம் செய்தது. அங்கீகாரம் பெற்ற மமதையில் மூர்க்கத்தனமாக செயல்பட்டது. நாம் இத்தனையும் சமாளித்து ஊழியர் பிரச்சினைகளில் தொடர்ந்து போராடி வந்துள்ளோம்.

ஆனால் இரண்டாவது அங்கீகாரத் தேர்தலில் தோல்வியைக் கண்ட பின், அங்கீகாரம் பெற்ற நமது கூட்டணியை செயல்பட விடாமல் தடுக்க பல்வேறு நீதி மன்றங்களில் வழக்கு தொடுத்தது NFTE. நம்மை JCM கவுன்சிலைக் கூட பயன்படுத்த விடாமல் முடக்க நினைத்தது. உயர்நீதிமன்றம் முதல் உச்சநீதி மன்றம் வரை முட்டிப் பார்த்தது; நம்மை முடக்கப் பார்த்தது. ஆனால் நமது தமிழ் மாநிலச் சங்கம் மத்திய சங்கத்தின் சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் அந்த வழக்கை திறம்பட சந்தித்து அவர்கள் முயற்சியை முறியடித்தது. நீதிமன்ற உத்தரவுக்குப் பின் JCM முறையாக அமைக்கப்பட்டு ஊழியர்களின் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளை நமது மத்திய சங்கம் வென்று தந்தது. இதைப் பட்டியலிட்டால் நீண்டுக் கொண்டே போகும்.

மூன்றாவது அங்கீகாரத் தேர்தலுக்கு முன் நிர்வாகத்தின் துணையோடு NFTE BSNL சங்கம் நமக்கு எதிராக பல்வேறு

கோயபல்ஸ் பிரச்சாரங்களில் ஈடுபட்ட போதும் ஊழியர்கள் நமது BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான கூட்டணியை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தனர். நீதிமன்றங்களை நம்பி இனியும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்த NFTE சங்கம், நிர்வாகத்தினை நாடுவது என்ற முடிவுக்கு வந்தது. நிர்வாகமும் பல ஆண்டு காலமாக தனக்கு சாதகமாக செயல்பட்ட சங்கம் என்ற முறையில் NFTE சங்கத்திற்கு பல சலுகைகளை வழங்க முடிவெடுத்து அமுலாக்கியது.

NFTE BSNL சங்கத்திற்கு சாதகமாக, அங்கீகரிக்கப்படாத சங்கங்களும் நிர்வாகத்தை சந்திக்கலாம்; அவர்கள் ஊழியர்களின் பிரச்சினையை விவாதிக்கலாம் என்னும் உத்தரவை வெளியிட்டது.

நாம் பலமுறை, நமது கூட்டணிச் சங்கங்களுக்கும் சந்தாவை சம்பளத்தில் பிடித்துத் தர வேண்டும் என்று கேட்ட போது அங்கீகார விதிகளைச் சுட்டிக்காட்டி ஏற்க மறுத்த நிர்வாகம், தனது விசுவாசியான NFTE சங்கம் அந்தக் கோரிக்கையை வைத்த போது அவர்களைக் காப்பாற்ற NFTE உட்பட அனைத்து விண்ணப்பித்த சங்கங்களுக்கும் அந்த வசதியை செய்து தர, அமைச்சர் எடுத்த முடிவை ஏற்று, நிர்வாகம் உத்தரவிட்டது.

இவை இரண்டும் கூட ஏதோ அனைத்துச் சங்கங்களுக்கும் கொடுக்கப்பட்ட வாய்ப்பு போன்ற ஒரு தோற்றத்தை தந்திருக்கலாம். ஆனால் அதன் சமீபத்திய உத்தரவு, நிர்வாகம் NFTE சங்கத்தினை தூக்கிப் பிடிக்க முயற்சிக்கிறது என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. அதுதான் கடந்த தேர்தலில் தல மட்டங்களில் பதினைந்து சதமான வாக்குகளைப் பெற்ற சங்கங்களுக்கும் "Works Committee"யில் இரண்டு பதவிகளைத் தர வெளியிடப்பட்ட உத்தரவு. 80 சதவிகிதத்திற்கு மேல் நமது கூட்டணி வெற்றி பெற்ற இடங்களில் கூட NFTE சங்கத்திற்கு பதவிகளை பெற்றுத் தருவதற்குக்கான ஏற்பாடுதான் இந்த உத்தரவு.

இது மட்டுமல்ல, முதல் அங்கீகாரத் தேர்தலுக்குப் பின் NFTE உடன் சேர்ந்து கொண்டு மற்ற அங்கீகரிக்கப்படாத சங்கங்களின் செயல்பாடுகளுக்கெல்லாம் தடை விதித்த BSNL நிர்வாகம், தற்போது NFTE சங்கத்தின் பல்வேறு கூட்டங்களுக்க சிறப்பு விடுமுறையை வழங்கி வருகிறது.

இப்படி நிர்வாகத்தின் துணையோடு ஊழியர்களின் வாக்குகளை பெறும் மோசமான நிலைக்கு NFTE தள்ளப்பட்டுள்ளது. தற்போது NFTE சங்கத்திற்கு வலுவான தலைமை கிடையாது. இந்தத் தேர்தலில் NFTE கூட்டணி நிச்சயம் வெற்றியும் பெறாது.

## NFTE, FNTO பிரச்சார துவக்கம் (தோல்விப் பாதையில்)

சமீபத்தில் பெங்களூரில் NFTE - FNTO கூட்டணி தேர்தல் பிரச்சாரத் துவக்க விழா நடைபெற்றது. பெங்களூர் அம்பேத்கார் ஹாலில் மொத்த இருக்கைகள் 960தான். இக்கூட்டத்தில் அதிகபட்சமாக கலந்து கொண்டவர்கள் 1000 பேர்தான். அதிலும் தமிழகம், சென்னையிலிருந்து சென்றவர்களே அதிகம். NFTE பொதுச் செயலர் சஜ்வானி கலந்து கொள்ளவில்லை. (ஏன் என்பது யாருக்குத் தெரியும்) ஆனால் NFTE இணையதளத்தில் 4500 பேர் எனவும், FNTO இணையதளத்தில் 4000 பேர் எனவும் விளம்பரங்கள் பளிச்சிடுகின்றன. ஊழியர்களுக்கு உதவாத கூட்டணியை தூக்கி நிறுத்த தலைமை போடும் க்பட நாடகம் அம்பலமாகிவிட்டது. (கூட்டம் குறைந்ததால் ஊர்வலம் கூட ரத்து ஆனதோ!)

**அரசின் கொள்கைக்கு ஆதரவான "இணைந்த கைகளை" புறம் தள்ளுவீர்...**

**வெற்றிச் சின்னமான ஊழியர் நலனில் அக்கறை கொண்ட "செல்" சின்னத்தில் வாக்களிப்பீர்...**

# மத்திய சங்க சாதனைகள்

நாம் அங்கீகாரம் பெற்ற நான்கு ஆண்டுகளில் கடந்த 40 ஆண்டுகளாக தீர்க்காத பல பிரச்சினைகளை தீர்த்து வைத்துள்ளோம் அவற்றில் சில:

(1) BSNLஐ பாதுகாக்கவும், BSNLஐ வளர்ப்பதற்கும் போராடியது.

(2) BSNLன் வளர்ச்சிக்காக அனைத்து சங்கங்களையும் இணைத்து Joint Forum அமைத்து போராடியது.

(3) அன்னிய நேரடி முதலீட்டை எதிர்த்து, ADC குறைப்பு, லைசென்ஸ் கட்டணம் மறுப்பு, USO நிதி குறைப்பு, காப்பர் கேபிள்களை தனியாருக்கு கொடுப்பதை எதிர்த்து, BSNLக்கு நவரத்னா அந்தஸ்து கொடுப்பதற்கான தொடர்ச்சியான போராட்டங்கள்.

(4) புதிய பதவி உயர்வு திட்டம்.

(5) BSNL ஊழியர்களுக்கு புதிய இன்சூரன்ஸ் திட்டம்.

(6) இன்சூரன்ஸ் பணம் திரும்பப் பெற்றது.

(7) BSNL ஊழியர்கள் அனைவருக்கும் HMT கைக்கடிகாரம்.

(8) 1.10.2000த்திற்குப் பின் நிரந்தரம் பெற்ற TSM ஊழியர்களுக்கு அரசாங்க பென்ஷன்.

(9) 2002-03ம் வருடத்திற்கான விடுபட்ட போனஸ் தொகை 25 சதவீதம் பெற்றது.

(10) புதிய போனஸ் ஃபார்முலா.

(11) பொதுத்துறை வங்கிகளிலிருந்து குறைந்த வட்டியில் பலவிதமான கடன் திட்டங்கள்.

(12) ஃபுட் அலவன்சு ரூ.75லிருந்து ரூ.225/-ஆக உயர்த்திப் பெற்றுத் தந்தது.

(13) கிராமப்புறத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ரூ.100/- ரூரல் அலவன்சு பெற்றுத் தந்தது.

(14) விழாக்கால முன்பணம் ரூ.1500/-லிருந்து ரூ.5000/-ஆக உயர்த்தியது.

(15) ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு ரூ.1000/-லிருந்து ரூ.2000/- Welfare தொகையை உயர்த்தியது.

(16) பயணப்படி ரூ.75/-லிருந்து ரூ.225/-ஆக உயர்த்தியது.

(17) Grade IV ஊழியர்களுக்கு Executivesக்கு இணையாக Conveyance Allowance உயர்திப் பெற்றது.

(18) உடல் ஊனமுற்றவர்களுக்கு பயணப்படி உயர்த்தியது.

(19) BSNLல் புதிதாக பணி நியமனம் பெறுபவர்களுக்கு இலவச தொலைபேசி வசதி.

(20) இலவச கால்களை உயர்த்திப் பெற்றது.

(21) ஊழியர்களுக்கு பிராட்பேண்ட் இணைப்பில் கட்டணச் சலுகை.

(22) MTNL பகுதிகளில் வசிக்கும் BSNL ஊழியர்களுக்கும் இலவச தொலைபேசி வசதி.

(23) ஓய்வு பெற்ற BSNL ஊழியர்களுக்கும் வாடகையில்லா தொலைபேசி.

(24) இலவச தொலைபேசியில் One India திட்டம் வசதி.

(25) ஐதராபாத் நகரத்தை HRAக்கு A1 Cityயாக உயர்த்தியது.

(26) சந்தாதாரர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூலிக்க இன்சென்டிவ் பெற்றுத் தந்தது.

(27) சந்தாதாரர்களுக்கு டெலிபோன் பில் பட்டுவாடா செய்ய ஊழியர்களுக்கு இன்சென்டிவ் பெற்றுத் தந்தது.

(28) TTAக்களின் சம்பள முரண்பாடு களையப்பட்டது.

(29) Welfareல் கல்வி உதவித் தொகை 20 சதவீதம் உயர்த்திப் பெற்றது.